செ.வெ.எண்: 33/ மார்ச் நாள்: 18.03.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

## செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக திரையிடப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு விளம்பர படக்காட்சியினை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் இன்று (18.03.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அதிநவீன மின்னணு திரைகொண்ட விளம்பர வாகனத்தின் மூலம் திரையிடப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு விளம்பர படக்காட்சியினை பார்வையிட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் மூலம் அதிநவீன மின்னணு திரைகொண்ட விளம்பர வாகனம் செயல்பட்டு வருகிறது. மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இவ்வாகனத்தின் மூலம் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் வாக்காளர் விழிப்புணர்வு விளம்பரப் படக்காட்சி நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் இன்று, தவறாமல் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் செய்தி மக்கள் தொடர்பு மின்னணு திரைகொண்ட விளம்பர வாகனத்தின் மூலம் விழிப்புணர்வு விளம்பரப் படக்காட்சி திரையிடப்பட்டது. பொதுமக்கள் ஏராளமானோர் இப்படக்காட்சியினை ஆர்வமுடன் பார்வையிட்டனர். மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுடன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு படக்காட்சியினை பார்வையிட்டு, தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று தவறாமல் வாக்களித்திட வேண்டுமென பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வின்போது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, இராமநாதபுரம் வருவாய் வட்டாட்சியர் திரு.மாரி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) திரு.ம.கயிலைச்செல்வம், (விளம்பரம்) திரு.நா.விஜயக்குமார் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**